
மேலும் இலவச பிரதிநிதிகளுக்கும்,
இலவச பத்திரிக்கை பிரதிநிதிகளுக்கும்,
எங்களை தொடர்பு கொள்ளுங்கள்




இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk

# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 8



- கடலுக்குப் போகிறவர்கள்
- ஒருவரையொருவர் மன்னித்தல்
- இயேசுவைக் குறித்து பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள்
- மேசியாவாக இயேசு
- இயேசு: தேவகுமாரன் மற்றும் மனுஷகுமாரன்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேரான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
http// www.choose2live.info/
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்

ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்

பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் மற்றும் சந்திர மோகன் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.


*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# கடலுக்குப் போகிறவர்கள்

## எங்கும் தண்ணீர்

இப்பூமியாகிய கிரகத்தின் மேற்பரப்பானது 70 சதவீதத்துக்கு மேலாக தண்ணீரினால் மூடப்பட்டுள்ளதால், வியாபாரத்திற்காகவும் வாணிபத்திற்காகவும் கடல்களையும் ஆறுகளையும் முக்கிய போக்குவரத்து வழியாக மனிதன் பயன்படுத்தி வருகின்றது வியப்பிற்குரியதல்ல. உண்மையில் அத்தகைய பயணமானது எப்போதும் சமாதானமிக்கதாக நிலவிவரவில்லை இருந்துவரவில்லை. சிலவேளைகளில் கடற்கொள்ளையர்கள் அங்கே கடலில் இருந்தார்கள் அல்லது கடற்போருக்குரிய கனமான போர்கருவிகளுடன் கப்பல்கள் பயணம் செய்தன.




தற்போதைய நாட்களில் வெகுதொலைவிலிருந்து பொருட்களைக் கொண்டு வருவதற்காக கடல்கள் பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக வேலையாட்கள் அதிக ஆயத்தமாய் காணப்படுகின்ற ஓரிடத்திலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருளானது இன்னொரு நாட்டில் விற்கப்படுகின்றது.

- கச்சா பொருட்களும் நுகர்வோர் பொருட்களும் பெரும் கடல்கள் வழியாக கடந்து செல்கின்றன.
- சமுத்திரத்தில் பயணம் செய்யும் உல்லாச கப்பல்கள் செல்வசெழிப்புமிக்க பயணிகளைச் சுமந்துச் செல்கின்றன.
- இன்னும் சிறப்பான ஒரு வாழ்வை வேறு எங்காவது தேடும்படி நம்பிக்கைக் கொண்டிருக்கும் அகதிகளைச் சிறுபடகுகள் ஏற்றிச் செல்கின்றன.
- படகுகளில் சுற்றித்திரிந்தும் வேகமாய் ஓட்டியும் அல்லது காற்று அவைகளைச் செலுத்தும்படி விட்டுக்கொடுத்தும் மனம் மகிழும் மனிதர்களினால் பொழுதுபோக்குப் படகுகள் அதிகஅளவில் பெருகுகின்றன.

## ஆபத்தான தண்ணீர்கள்

இங்கிலாந்தின் தென்கடற்கரை ஓரங்களிலுள்ள ஸிட்மௌத் கடற்கரையிலிருந்து யாக்கோபின் ஏணியில் நீங்கள் ஏறி இருந்தால், இங்கிலீஷ் கால்வாயை உற்றுநோக்கிக் கொண்டிருப்பீர்கள். இது உலகிலுள்ள மிகவும் சுறுசுறுப்பான நீளமான நீர்ப்பரப்புகளில் ஒன்றாகத் திகழ்கிறது. பெரிய கப்பல்கள் கூட காண முடியாத அளவுக்கு மிகத் தொலைவில் இருக்கின்றன. எனினும் அருகாமையிலுள்ள கிராமங்களின் மீன்பிடிக்கும் சிறுபடகுகளில் வரிசையிலிருந்து கப்பல்களை அல்லது சிறு துறைமுகங்கலேயே நிற்கின்ற அல்லது ஸிட்மௌத்திலுள்ள சிறு துறைமுகங்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் உல்லாசக் கப்பல்களை நீங்கள் காணக்கூடும்.

கடலினை ஒருபோக்குவரத்து நெடுஞ்சாலையாகப் பயன்படுத்தும் கப்பலின் உருவ அளவு எவ்வளவாக இருந்தாலும் கூட கடலானது துன்பமிகுந்ததாகவும் ஆபத்தானதாகவும் மாறக்கூடும். செயற்கைக்கோள் தகவல் பரிமாறும் அமைப்பும் ரேடார்கள் போன்றவற்றால் நன்கு ஆயத்தப்படுத்தப்பட்ட மிக நவீன கப்பல்கூட சிலவேளைகளில் நிலம், நீர், காற்று தீ ஆகிய பொருட்களின் தயவுக்குத் தள்ளப்பட்டிருப்பதைக் காண முடியும். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு - கப்பல்கள் எல்லாம் மிக சிறியனவாகவும் குறைந்த / கருவிகளால் ஆயத்தமாக்கப்பட்டிருக்கும் வேளையில், ஒரு சில விபத்துக்களை அல்லது சேதங்களை நாமும் எதிர்பார்த்திருக்கக்கூடும். ஆகவே அப்போஸ்தலனாகிய பவுல் தன் சாகசப்பட்டியலில் *'சமுத்திரத்தினால் உண்டான மோசங்களிலும்'* (2. கொரிந்திரியர் 11:26) என்று சேர்த்துள்ளது உண்மையில் ஆச்சரியமானதாக இல்லை.



அவர் செய்த பல்வேறு பயணங்களில் பலமுறை அவர் மத்திய தரைகடலில் கப்பற்சேதத்திற்குள்ளாகி இருக்கிறார். ஏறக்குறைய அவர்கள் அனைவரும் கூட இருக்கலாம். அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகத்தில் 27ஆம் அதிகாரத்தில் அத்தகைய விளக்கமானது படிப்படியாக விவரிக்கப்பட்டிருக்கிறது. இது பழங்காலங்களில் கடற்பயணத்தின்போது கையாளப்பட்ட செயல் முறைகளைப்பற்றிய குறிப்பிடத்தக்க சரித்திரபூர்வமான ஒரு விளக்கமாக உள்ளது. ஆனால் அதை விடவும் குறிப்பிடத்தக்கதாக இருப்பது தேவன் அப்போஸ்தலனான பவுலோடு கடற்பயணம் செய்த அனைவரையும் காப்பாற்றியது.

**புயல் சூழ்ந்த காலநிலை**

ஒரு புயலடிக்கும் வேளையில் கடலில் பயணம் செய்தால் எப்படி இருக்கும் என்பதை 107 ஆம் சங்கீதத்தை எழுதியவர் கூர்மையாகக் கவனித்துள்ளார். அதனால் தான் அவர் இவ்வாறு சொல்லுகிறார்.

*"கப்பலேறி, கடல் யாத்திரை பண்ணி, திரளான தண்ணீர்களிலே தொழில் செய்கிறார்களே, அவர்கள் கர்த்தருடைய கிரியைகளையும், ஆழத்திலே அவருடைய அதிசயங்களையும் காண்கிறார்கள். அவர் கட்டளையிட பெருங்காற்று எழும்பி, அதின் அலைகளைக் கொந்தளிக்கப்பண்ணும். அவர்கள் ஆகாயத்தில் ஏறி, ஆழங்களில் இறங்குகிறார்கள், அவர்கள் ஆத்துமா கிலேசத்தினால் கரைந்து போகிறது. வெறித்தவனைப்போல் அலைந்து தடுமாறுகிறார்கள்; அவர்களுடைய ஞானமெல்லாம் முழுகிப்போகிறது. அப்பொழுது தங்கள் ஆபத்திலே அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார். கொந்தளிப்பை அமர்த்துகிறார். அதின் அலைகள் அடங்குகின்றது"* (சங்கீதம் 107:23-29).

ஒரு கப்பலானது அலையோடு சேர்ந்து பந்தாடப்படும் வகையினையும் காற்றின்



வலிமையினையும் குறித்த நேரடியான ஓர் உயிர்துடிப்புள்ள விளக்கத்தை இது தருகிறது. ஆனாலும் நிலம், நீர், காற்று போன்றவைகள் தேவனின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது என்பதைச் சங்கீதக்காரன் தெளிவாக புரிந்திருக்கிறான். அவரால் *புயற்காற்றை அமைதிப்படுத்தவும்* (வ.29) பாதுக்காப்பாக *அவர்களைத் துறைமுகம் கொண்டு சேர்க்கவும் முடியும்* (வ.30).

**மீட்புப்பணி**

கற்பனை செய்து பாருங்கள் - நீங்கள் ஒரு சிறிய திறந்த வெளிப்படகில் இருக்கிறீர்கள். அது கடற்கரையின் பாதுகாப்புப் பகுதிக்கு அப்பால் சென்றப்பின் அதனை திடீரென்று ஒரு புயல்காற்று தூக்கி எறிந்து விடுகிறது. கொட்டும் மழையில் கொடுங்காற்றும் உங்கள் படகை உடைத்தெறியப் போவதாக பயமுறுத்துகின்றது. நீங்கள் ஒரு நிமிடத்தில் ஒரு தொட்டியின் ஆழத்தில் இருக்கின்றீர்கள் மறுநிமிடத்தில் பத்து அடி உயர அலைகளுக்கு மேலாக இருக்கின்றீர்கள். நீங்கள் கடுங்குளிரிலும், தோலின் ஆழம் வரை நனைந்து விட்ட நிலையிலும், மோசமான கடல் வியாதியினாலும் பயத்தினாலும் திகிலடைந்து விட்டீர்கள். நீங்கள் முற்றிலும் கடலின் தயவிலும் பெருஞ்சீற்றத்தோடு வீசும் காற்றின் தயவிலும் இருப்பதை உணர்ந்து கொள்கிறீர்கள். உங்களால் உங்களையே காப்பாற்றிக்கொள்ள முடிந்த ஒரு வழியும் இல்லை.

அப்போது, இருளையும் மழையையும் ஊடுருவிக்கொண்டு ஒரு கப்பல் அருகில் வருகிறதைப் பார்க்கிறீர்கள். நீங்கள் மனப்பிரம்மையால் காண்கிறீர்களா? இல்லை. இன்னும் மிக அருகில் வரும் அது ஒரு உயிர் மீட்சி படகு என்பதை உணர்ந்து கொள்கிறீர்கள். அது உங்கள் பக்கமாக வருகிறது. இம்மாதிரி சூழ்நிலைகளைக் கையாளுவதற்கு உயர்திறம் பெற்ற வல்லுநர்களான படகோட்டும் குழுவினர் மஞ்சள்நிற எண்ணெய் தோல் உடைகளில் இருப்பதை உங்களால் கண்டு பிடித்துக் கொள்ள முடிகிறது. அவர்கள் உங்கள் பக்கமாக வருகிறார்கள். உங்களை எடுக்கிறார்கள். பல நிமிடங்கள் கழிந்து போவதற்குள் அமைதியான சீர்பரப்புக்கு கொண்டு வந்து விடுகின்றனர். அனைத்து நம்பிக்கையையும் இழந்து இனி திரும்பவும் பார்க்கவே முடியாது என்று கருதிய கட்டிடங்களும் நங்கூரமிட்ட கப்பல்களும் மக்களும் அங்கிருந்தனர். உங்களது பாதுகாப்பான புகலிடமாகிய துறைமுகத்திற்கு வந்து சேர்ந்து விட்டீர்கள்.

**தண்ணீரின் மீது நடத்தல்**

இயேசுவினுடைய ஒரு சில சீடர்களுக்கு இதே போன்ற அனுபவம் இருந்தது. அவர்கள் கலிலேயா கடலைக் கடந்து செல்லும் போது கொடுங்காற்று ஒன்று எழுந்தது. அவர்கள் மீன்பிடிப்பதில் வல்லுநர்களாக இருந்தபோதிலும் அக்காற்றை எதிர்த்து முன்னோக்கிச்செல்ல முடியவில்லை. ஆனால் அப்போது அவர்கள் கண்டார்கள். அது ஒரு உயிர்மீட்சி படகு அல்ல. இயேசுவே அவர்களை நோக்கி தண்ணீரின் நடந்து வந்து கொண்டிருந்தார். அவர் பக்கமாக வந்தார். அவரை அவர்கள் படகுக்குள் ஏற்றுக்கொண்டனர். அப்போஸ்தலனாகிய யோவான் இவ்வாறு குறிப்பிடுகின்றான்:

*"அப்பொழுது அவரைப் படகில் ஏற்றிக்கொள்ள மனதாயிருந்தார்கள். உடனே படவு அவர்கள் போகிற கரையைப் பிடித்தது"* (யோவான் 6:21).

இன்னொரு சந்தர்ப்பத்தில் அதே கடலில் இயேசு *"இரையாதே. அமைதலாயிரு"* என்று எல்லோராலும் அறியப்பட்ட வார்த்தையைச் சொல்லி ஒரு புயற்காற்றை அமைதிப்படுத்தினார். ஆச்சரியமடைந்த சீடர்கள் கேட்டனர். *"இவர் யாரோ? காற்றும்*

*கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று, ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்"* (மாற்கு 4:41).

அதே போல நாம் அனைவரும் ஒரு படகில் வாழ்க்கை என்னும் கடலில் பயணம் செய்து கொண்டிருக்கிறோம். ஒன்றில் நாம் தாறுமாறாக நோக்கம் ஏதுமின்றி காற்றோட்டத்தில் இழுத்துச்செல்லப்படவும், வீசும் காற்றின் விருப்பத்திற்கேற்ப அங்கும் இங்கும் தாக்கி எறியப்பட்டு அலைக்களிக்கப்பட்டு அலைகளால் இழுத்துச் செல்லப்படவும் முடியும் அல்லது ஒரு பாதுகாப்பான புகலிடமாகிய துறைமுகத்திற்கு நம்மைக் கொண்டு செல்லும் பாதையைப் பற்றிக்கொண்டு நம்மால் கூடிய மட்டும் அதில் படகை நடத்திச் செல்ல முடியும்.



கட்டளைச் செய்யும்படி - கணிப்பொறி செயல்திட்டங்களை, உள்ளடக்கிய கணிப்பொறிப் பொம்மைகளைப் போல தேவன் நம்மை உருவாக்காமல் அவருக்குச் சேவை செய்வதையோ அல்லது அவரை அலட்சியம் பண்ணுவதையோ நாம் தெரிந்துகொள்ளும்படி நமக்குச் சுதந்திரமான சித்தத்தைப் போக்கை தந்திருக்கிறார்.

அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ள கடுமுயற்சி செய்பவர்களுக்கு அற்புதமான வாக்குத்தத்தங்கள் ஆயத்தமாக்கப்பட்டிருக்கின்றது. கடந்தகால சீடர்களைப் போல, நம்பக்கமாக வந்து படகில் ஏறி, நமது வாழ்வைப் பாதுகாப்பான புகலிடமான துறைமுகம் நோக்கி, அதாவது பூமியின் மீது நிலைநாட்டப்போகின்ற அற்புத இராஜ்யத்தை நோக்கி, நேராக நடத்திசெல்லும் தலைமை மாலுமியாக இருக்கும்படி இயேசுவை அழைக்க நம்மால் முடியும். வார்த்தைகளில் இறை துதி பாடும் எழுத்தாளர் இதனை இவ்வார்த்தைகளில் வெளிப்படுத்துகின்றார்.

இயேசுவே, மீட்பரே,
வாழ்க்கை கடலில்
கடற் பயணத்தில்
நீர் எங்கள் அருகில் இரும்,
உம்மை வேண்டுகிறோம்.
அப்போதுதான், மரணப்புயல்
ஆர்ப்பரித்து அடித்துச்செல்லும் போதும்
ஓ, வாழ்வின் கர்த்தரே,
"சமாதானம்! இது நான் தான்"
என்று நீர் சொல்லும்.

**- அலெக்ஸ் மதர்ஸ்டின்**



# ஒருவரையொருவர் மன்னித்தல்

உங்கள் மனதை வேதனைப்படுத்திய ஒருவரை மன்னிப்பது மிகக் கடினமான காரியமாகும். இஸ்ரவேலர் விக்கிரகாராதனையைத் தொடர்ந்து செய்து வந்ததால் ஆண்டவருடைய உள்ளத்தை மிகவும் புண்படுத்தினர். எனினும் அவர்களைத் தேவன் மன்னித்தார். மன்னிக்கப்பட்ட பாவிகளாகிய நாமும் முழுமனதுடன் பிறரின் தகுதிக்கு அப்பாற்பட்டு அவர்களை மன்னிக்கும்படி நல்ல முன்மாதிரி காட்டினார்.

**கவன ஈர்ப்பு: மத்தேயு 6:9-15**

வேத வாக்கியங்களில் மிகவும் அறிமுகமான பகுதி கர்த்தருடைய ஜெபமாக இருந்தாலும், அதிலுள்ள மன்னிப்பின் செய்தியைப் பலர் அலட்சியம் பண்ணுகிறார்கள். இயேசு போதித்த இந்த மாதிரி ஜெபத்தின் மூலம் மன்னிப்பு என்பதில் நமது முடியாமையையும் தேவையையும் நாம் அறிந்து கொள்ள விரும்புகிறார். மன்னிக்கப்பட்ட பாவிகளாக நமக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தவர்களை நாமும் இரக்க குணத்துடனும் தெளிந்த மனதுடனும் மன்னிக்க வேண்டும்.



1. தேவன் தமது நடத்தையை முன்மாதிரியாக வைத்து நாம் அதைப் பின்பற்றி பிறரை மன்னிக்கும்படி எதிர்பார்க்கிறார். அது கடினமா?
2. வசனங்கள் 14, 15யை மறுபடியும் படியுங்கள். ஏன் தேவனுடைய மன்னிப்பில் நிபந்தனை உள்ளது? விளக்குக.
3. உன் நண்பர் ஒருவர் பொய் பேசிவிட்டார். அது உனக்குத் தெரியவருகிறது. நீ என்ன செய்வாய்?

நீ அவரை மன்னிக்குமுன்பு, அவர் மன்னிப்பு கேட்கும் வரை காத்திருக்க வேண்டுமா?

அவர் மனந்திரும்பாத பட்சயத்தில் நீ என்ன செய்ய வேண்டும்? அது தேவன் பாவிகளை மன்னிக்கும் விதத்தை விட முரண்பாடானதா?

உன் நண்பர் விசுவாசியாக இருந்தால் அவரிடம் வேறு விதமாய் நடந்திருப்பாயா?

## மன்னிக்கும் ஆவி

கிறிஸ்துவின் விடுதலை! இதன் அர்த்தம் என்ன? விசுவாசிகள் "பாவஅடிமைத் தனத்திலிருந்து," இயேசு கிறிஸ்துவின் பாவ மன்னிப்பின் மூலம் விடுதலைப் பெற்றுள்ளனர். தேவனிடமிருந்து பாவமன்னிப்பு பெற்றேன் என்று சொல்லும் போது, நாம் பிறருடைய பாவத்தை எவ்வாறு கணக்கிடுகிறோம் என்ற பார்வை மிகவும் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

அதாவது, நமக்கு மன்னிக்கும் ஆவி இருக்க வேண்டும். தாழ்மையோடு, நாமும் பிறருடைய தப்பிதங்களை உண்மையாக மன்னிக்க ஆயத்தமாக

இருக்கவேண்டும். ஆண்டவர் எவ்வாறு நம்மை மன்னித்தாரோ அதைப் போல நாமும் மன்னிக்கச் சித்தமாக இருக்க வேண்டும். ஏனெனில் நாமும் கிருபை பெறத் தகுதியற்றவர்கள் என்பதை மறந்து போகக் கூடாது. நாம் பிறருக்கு மன்னியாமற் போனால் ஏன் ஆண்டவர் நமக்கு மன்னிக்கவேண்டும்? நம்மிடம் என்ன தகுதி இருக்கிறது? இயேசு கூறினார். *''இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இரக்கம் பெறுவார்கள்''.* மற்றொரு பகுதியில் இவ்வாறு கூறியுள்ளார். *''பிறருக்கு எந்த அளவினாலே அளக்கிறீர்களோ, அந்த அளவினாலேயே உங்களுக்கு அளக்கப்படும்''* நாம் பிறரை எவ்விதமாக நடத்துகிறோமோ அதே விதமாக ஆண்டவரும் நம்மை நடத்துவார் என்று யாக்கோபு எழுதினான்.

*''சுயாதீனப் பிரமாணத்தினால் நியாயத் தீர்ப்பு அடையப் போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றப்படி செய்யுங்கள். ஏனென்றால், இரக்கஞ் செய்யாதவனுக்கு, இரக்கமில்லாத நியாயத் தீர்ப்பு கிடைக்கும். நியாயத் தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும்''* (யாக்கோபு 2:12-13).

பிறரை மன்னிப்பது இயற்கை குணம் அல்ல. பழிவாங்கினால் திருப்தி கொள்வது சரியென நினைக்கிறோம். நாம் மனந்திரும்பி நமது குற்றங்கள் அகன்று போனதன் விளைவு நமது சிந்தனையை மாற்ற வேண்டும். ஆனால் குற்றங்களை மன்னிப்பதை வாழ்க்கை முழுவதும் கடைபிடித்து வளருவது படிக்க வேண்டிய ஒன்றாகும். விசுவாசி ஆண்டவரிடம் கிட்டிச்சேர சேர, மன்னிக்கும் பழக்கம் இயல்பான குணமாக மாறி விடும். பழைய பாவ சுபாவம் முற்றிலும் மாறி, தேவ சாயலாக மாறுவாய், பவுல் இந்த மறுரூப அனுபவத்தை நன்றாய்ப் புரிந்திருந்தான்:

*''கர்த்தரே ஆவியானவர். கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோல கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால், அந்த சாயலாகத் தானே மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்''* (2. கொரிந்தியர் 3:17.18)

## கிரியைகள் வார்த்தைகளைவிட சத்தயமாய்ப் பேசுகின்றன

முறிந்துப்போன உறவுகளைத் திருத்திக் கொள்ளும்படி ''உன்னை மன்னிக்கிறேன்'' என்று சொல்வது நல்ல ஆரம்பம்தான். ஒருவர் உன்னை மனம் நோகச் செய்துவிட்டால் அதை மறக்கவும் அந்த காயம் ஆறவும் நாட்கள் பிடிக்கும். அது ஒருபோதும் மறுநாளிலேயே சரியாகும் என்று எதிர் பார்க்கமுடியாது. ஆனாலும் சொன்னதைத் தொடர்ந்து செய்தால் மன்னிப்பு என்பது பாங்கான அர்த்தமுள்ளதாக மாறும்.

தவறு செய்தவர் அவிசுவாசியாக இருக்கும் பட்சத்தில், அல்லது மனந்திரும்பாத பொழுது, மன்னிப்பு மற்றும் இரக்கத்தைக் கடைபிடிப்பது மிக முக்கியம். பின்வரும் முன்மாதிரிகளை எவ்வாறு பயன்படுத்துவீர்கள்?

*''உன் சத்துருவின் மாடாவது அவனுடைய கழுதையாவது தப்பிப் போகக் கண்டால், அதைத்திரும்ப அவனிடத்தில் கொண்டு போய் விடுவாயாக, உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்து கிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவி செய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடே கூட அதற்கு உதவி செய்வாயாக''* (யாத்திராகமம் 23:4-5).



*''உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு, அவன் தாகமாயிருந்தால், குடிக்கத்தண்ணீர் கொடு. அதினால் நீ அவன் தலையில் மேல் எரிகிற தழல்களைக் குவிப்பாய். கர்த்தர் உனக்குப் பலனளிப்பார்.''* (நீதிமொழிகள் 25:21-22)

**சில பொருத்தமான வேத பகுதிகள்:**

| | |
|---|---|
| பிறரை மன்னிக்கும் படி கட்டளைகள் | - எபேசியர் 4:32; கொலோசெயர் 3:13 |
| சகோதரை மன்னித்தல் | - மத்தேயு 18:15-35; லூக்கா 17:3-4; 2. கொரிந்தியர் 2:7-10 |
| ஆண்டவரின் மன்னிப்பு நிபந்தனையுடையது | - மாற்கு 11:25 |
| பழிவாங்க முயற்சி செய்யாதே | - ரோமர் 12:19; 1. பேதுரு 3:9 |
| மன்னிப்பின் உதாரணங்கள் | - ஆதியாகமம் 50:17-21; எண்ணாகமம் 12:1-3;14:19-20; அப்போஸ்தலர் 7:60 |

மேற்கண்ட இரு வேத பகுதிகளிலும், உனது சத்துருவின் நன்மையையும் சொத்தையும் பாதுகாக்கும்படி ஆண்டவர் கூறுகிறார். உன் சத்துருவிடம் இரக்கத்தையும் அன்பையும் காட்டுவதால், நீ இயேசு கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றுகிறாய். அதனால் உன் சத்துரு ஆண்டவரிடம் திரும்பக்கூடும். கிரியைகள் வார்த்தைகளை விட சத்தமாய்ப் பேசுகின்றன.

## பழிவாங்குதலை விட்டுத் திரும்புதல்

நாம் பழியையல்ல, பரிவைக் காட்டும்படி ஆண்டவர் விரும்புகிறார். பழி வாங்கும்படி முயற்சிப்பதைவிட, இரக்க குணத்தைக் காட்டுங்கள். நீதியாய் நியாயம் விசாரிக்கிற ஆண்டவரிடம் பழிவாங்குதலை விட்டு விடுங்கள்.

*''ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள். எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார், என்று எழுதியிருக்கிற படியால், நீங்கள் பழி வாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். நீ தீமையினால் வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு''* (ரோமர் 12:17-19,12)

## பொருளடக்கம்

தெய்வ ஜனம் பிறர் செய்த தவறுகளை மன்னித்து இரக்கம் காண்பிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அது மனந்திரும்பின ஒரு விசுவாசி உள்ளத்தின் ஆழத்திலிருந்து உண்மையாய் வரவேண்டும். நாம் இரக்கத்தைக் காண்பியாதிருந்தால், ஆண்டவர் நம்மேல் இரக்கம் காண்பிக்க மாட்டார் என்று கூறுகிறார்.

# இயேசுவைக் குறித்து பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள்

இஸ்ரவேலில் ராஜாவாக வரப்போகிற மேசியாவைப் பற்றி ஏராளமான தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாட்டில் உள்ளன. அவைகள் அவருடைய பிறப்பு, அவருடைய வம்சம், அவரது ஜீவியம், அவரது மரணம் மற்றும் அவரது நித்தியராஜ்யத்தில் அவர் ராஜாவாக ஆளுவது குறித்துப் பேசுகின்றன. இயேசுவை மேசியா என்று காட்டும்படி அப்போஸ்தலர் அந்த தீர்க்கதரிசனங்களைப் பயன்படுத்தினர்.

**கவன ஈர்ப்பு : சங்கீதம் 22**

தாவீது தனது சத்துருக்களால் தொடர்ந்து நெருக்கப்பட்டபோது இந்த சங்கீதத்தை ஜெபமாகப் பாடினான். அதே நேரம் இந்த சங்கீதம் இயேசுவின் பாடு மரணத்தைக் குறித்து தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டதை சுவிசேஷ நூல்களில் பார்க்க முடிகிறது.



1. இந்த சங்கீதம் நேரடியாகச் சொல்லப்பட்ட இடங்களை நற்செய்தி நூல்களிலிருந்து கண்டுபிடியுங்கள்.

2. சிலுவை மரணத்தைக் குறித்தாலும் இந்த சங்கீதம் நேரடியாகச் சொல்லாத வேறே வேதபகுதிகளைக் கண்டு பிடியுங்கள்.

3. இயேசுவின் சிலுவை மரணத்துக்குச் சம்பந்தப்பட்ட எதையும் பேசாத ஏதாவது வசனங்கள் இதில் உண்டா?

**அவருடைய ஜீவியம் முன்னறிவிக்கப்பட்டது.**

இயேசுவின் வாழ்க்கை சம்பவங்கள் அநேகம் பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்டவைகளாகும். அவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தீர்க்கதரிசனங்கள் இதோ:

✦ அவர் யூத கோத்திரத்தில் புறப்படுவார்



*“சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதுமில்லை. நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதுமில்லை. ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்”* (ஆதியாகமம் 49:10) (நிறைவேறினது : லூக்கா 3:33ல்).

✦ அவர் தாவீதின் வமசத்தில் தோன்றுவார்.

“உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது, நான் உனக்குப் பின்பு உன்கர்ப்பப் பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப் பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன். அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான். அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப் பண்ணுவேன்.” (2. சாமுவேல் 7:12-13) (நிறைவேறினது : மத்தேயு 1:6,16ல்)

✦ அவர் பெத்லகேமில் பிறப்பார்.

*‘‘எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார். அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது”* (மீகா 5:2) (நிறைவேறினது : மத்தேயு 2:4-6ல்).

**சில பொருத்தமான வேத பகுதிகள்**

| | | |
|---|---|---|
| பூர்வ தீர்க்கதரிசனங்கள் | : | ஆதியாகமம் 3:15;49:10; உபாகமம் 18:15-19. |
| தாவீதின் குமாரன் | : | 2 சாமுவேல் 7:12-16; ஏசாயா 11:1-2; எசேக்கியேல் 37:24-28; லூக்கா 1:30-33. |
| ஆபிரகாமின் குமாரன் | : | ஆதியாகமம் 22:15-18; கலாத்தியர் 3:16. |
| சங்கீதம் | : | 2;8:16;22; 69;110; 118:22. |
| ஏசாயா | : | 7:14; 9:1-2; 6:7;11;42;49;53;61. |
| பின்வந்த தீர்க்க தரிசிகள் | : | எரேமியா 23:5-6; தானியேல் 7:9-14;9; மீகா 5:2; சகரியா 9:9; 12:10; 14:3-4. |

✦ அவர் ஒரு கன்னியிடம் பிறப்பார்.

*‘‘ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார். இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்”* (ஏசாயா 7:14) (நிறைவேறினது : மத்தேயு 1:8ல்).



✦ அவர் கலிலேயாவில் வாசம் பண்ணுவார்.

*“ஆகிலும் அவர் செபுலோன் நாட்டையும் நப்தலி நாட்டையும் இடுக்கமாய் ஈனப்படுத்தின முந்தின காலத்திலிருந்தது போல அது இருண்டிருப்பதில்லை. ஏனென்றால் அவர் கடற்கரையருகிலும், யோர்தான் நதியோரத்திலுமுள்ள புறஜாதியாருடைய கலிலேயாவாகிய அத்தேசத்தைப் பிற்காலத்திலே மகிமைப்படுத்துவார். இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்கள் மேல் வெளிச்சம் பிரகாசித்தது”* (ஏசாயா 9:1-2).

✦ அவர் புறக்கணிக்கப் படுவார்.

*‘‘அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடநுபவித்தவருமாயிருந்தார். அவரைவிட்டு நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம். அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார். அவரை எண்ணாமற் போனோம்” (ஏசாயா 53:3) (நிறைவேறினது : யோவான் 1:11ல்).*



✦ அவர் கழுதையின் மேல் ஏறி எருசலேமுக்குள் பவனி வருவார்.

*“சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூறு, எருசலேம் குமாரத்தியே,*





*கெம்பீரி, இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார். அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின் மேலும் கழுதைக் குட்டியாகிய மறியின் மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்”* (சகரியா 9:9).

**இயேசுவைச் சுட்டிக் காட்டுபவைகள்**

இயேசுவை முன்குறிக்கும் தீர்க்கதரிசனங்கள் மட்டுமின்றி, அநேக விதத்தில் அவரைச் சுட்டிக்காட்டுகின்ற வசனங்களும் உள்ளன. உதாரணமாக, பஸ்கா பண்டிகையில், குற்றமில்லாத ஒரு ஆட்டுக்குட்டி கொல்லப்பட்டது (யாத்திராகமம் 12:3-6). அது இயேசு பலியாக்கப்படுவதற்கு அடையாளமாக இருந்தது. அவர் *“உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி”* (யோவான் 1:29). சிலர் இயேசுவுக்கு அடையாளமாக விளங்கினர். உதாரணமாக, எருசலேமின் அருகில் மோரியா மலையில் அந்த சம்பவம் நடைபெற இருந்தது. அதைப் போலவே எருசலேமின் அருகில் தேவன் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை ஏக பலியாக ஒப்புக்கொடுத்தார். வேறே எந்த உதாரணத்தை நாம் இயேசுவுக்கு ஒப்பிடலாம்?

✦ அவர் மரணத்துக்கு ஒப்புக் கொடுக்கப்படுவார்.

*“அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டுப் போகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்திரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப் பட்டார். அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்? ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார். என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்”* (ஏசாயா 53:7-8) (நிறைவேறினது : மத்தேயு 27:12,14).

✦ அவர் சிலுவையிலறையப் படுவார்.



*''நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது. பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்து கொண்டது. என் கைகளையும் என் கால்களையும் உருவக்குத்தினார்கள்''* (சங்கீதம் 22:16) (நிறைவேறினது : மத்தேயு 27:38).

✦ அவருடைய வஸ்திரத்துக்காக ஜனங்கள் சீட்டுப் போடுவார்கள்.

*''என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப் போடுகிறார்கள்''* (சங்கீதம் 22:18) (நிறைவேறினது : யோவான் 19:23-24ல்).

✦ அவர் மரணத்திலிருந்து எழுப்பப்படுவார்.

*"என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர். உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்"* (சங்கீதம் 16:10) (நிறைவேறினது : மத்தேயு 28:5-9).

இன்னும் அநேக தீர்க்கதரிசனங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றைக் கண்டுபிடியுங்கள்.

**உங்கள் சிந்தனைக்கு:**

1. மத்தேயு 1:18 முதல் 3:3 வரை படியுங்கள். இதில் குறிப்பிட்டுள்ள தீர்க்கதரிசனங்களைத் தனியாக எழுதுங்கள், அவற்றை வாசித்துப் பாருங்கள். இயேசு பிறந்தபோது நீங்கள் இருந்திருந்தால், இயேசுவைக் குறித்து சொல்லப்பட்ட எந்தெந்த தீர்க்கதரிசனங்களை இனங் கண்டிருப்பீர்கள்? மத்தேயு பழைய ஏற்பாட்டைச் சரியாக வியாக்கியானம் செய்கிறானா?

2. ஏசாயா 53 இயேசுவின் மரணத்தைக் குறித்து மிகவும் அறிமுகமான ஒரு அதிகாரம். எனினும், யூதர்கள் அதை இஸ்ரவேலரைக் குறித்து சொல்லப்பட்டதாகக் கூறுகிறார்கள். இதற்கு உங்கள் பதில் என்னவாக இருக்கும்?



# மேசியாவாக இயேசு



''மேசியா'' மற்றும் ''கிறிஸ்து'' என்ற, எபிரெயு மற்றும் கிரேக்க வார்த்தைகள் இரண்டுக்கும் ஒரே அர்த்தம் ''அபிஷேகம் பண்ணப்பட்டவர்.'' இரண்டுமே இயேசுவுக்குப் பொருந்துகிற பட்டப்பெயர்கள். ஏனெனில், அவர் தேவனால் மனிதகுலத்தின் இரட்சிப்புக்கென்று கிரியை செய்யும்படி அபிஷேகம் பெற்றவர். என்றாலும் இயேசுவின் காலத்தில் வாழ்ந்த யூதர்கள் மேசியாவின் வருகைக்குக் காத்திருந்தாலும், அவர் வரும்போது அவரை அடையாளம் கண்டு ஏற்றுக்கொள்ளவில்லை. அது ஏன் என்பதை இந்த அத்தியாயத்தில் காண்போம்.

**கவன ஈர்ப்பு: லூக்கா 24:13-32**

இயேசுவைக் கைது செய்தபோது, சட்டவிரோத விசாரணைக்கு அவரை உட்படுத்தி, மரண தீர்ப்பளித்து, அவரை மிகவும் மோசமாக பயங்கரமான வழியில் நடத்தி கொன்று போட்டார்கள். அவருடைய சீஷர்கள் மிகவும் பயந்து அவரை விட்டு ஓடிப் போனார்கள். அவர்களுடைய நம்பிக்கை அழிந்தது. இயேசு பலமுறை தெளிவாகத் தமது பாடுமரணம் குறித்து அவர்களிடம் ஏற்கனவே சொல்லியிருந்தும் அவருக்கு இப்படிப்பட்ட பயங்கர முடிவு வரும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. இதனால் அவரோடிருந்த தங்களது உறவு பாதிக்கப்படும் என்று கொஞ்சங்கூட நினைத்திருக்கவில்லை. *"இவரே இஸ்ரவேலை மீட்டிரட்சிப்பவர் என்றுநாங்கள் நம்பியிருந்தோம்"* (வ-21) என்று எம்மாவு கிராமத்துக்குச் செல்லும் வழியில் சீஷர்கள் பேசிக் கொண்டனர். அவர்கள் எண்ணத்தை மாற்றும்படி உயிர்த்தெழுந்த இயேசு சற்று நேரம் அவர்களுடன் செலவழித்து அவர்களுடைய நினைவுகளை ஒருங்கிணைத்தார்.

1. இந்த வேதபகுதியில் கூறப்பட்ட இரண்டு சீஷர்களும் தாங்கள் அறிந்த மட்டில் இயேசு மரித்தார் என்றும், அவர் உண்மையில் மேசியா (கிறிஸ்து) என்றும் விசுவாசித்தார்களா? அவர்களுடைய எண்ணம் மாறினதா?

2. எம்மாவுக்குப் போகும் வழியில் அவர்களுக்கு விளக்கப்பட்டப் பின் மிகவும் தெளிவாக அவர்கள் புரிந்து கொண்டிருந்தும், இயேசுவோடு நடந்த சம்பாஷணைக்கு முன்பு ஏன் அவர்கள் கிறிஸ்துவின் ஊழிய நோக்கத்தைப் புரிந்து கொள்ளத் தவறினார்கள்?

3. *"மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதிய வேத வாக்கியங்கள்"* (வசனம் - 27) மூலம் கிறிஸ்து பாடுபட வேண்டும் என்று இயேசு விளக்கின வேதபகுதிகள் எவைகளாக இருந்திருக்கக் கூடும்? அவைகள் தெளிவாக இருந்தனவா?

ஏன் இயேசுவோடு கூட இருந்த சீஷர்களும், அன்றைய யூதரில் யாருமே மேசியா யார், அவர் என்ன செய்ய வேண்டும் என்பதை அறியாதிருந்து விட்டார்கள்? அதன் உத்தரவு மேசியா செய்ய வேண்டிய இரண்டுவித வேலைகளில் இருந்தது. இரண்டுமே தேவனுடைய திட்டத்தில் முக்கியமானவைகள். ஆயினும் ஒன்றை மட்டும் யூதர்கள் அடையாளம் கண்டனர்.

**மேசியாவைப் பற்றி வழக்கமான கண்ணோட்டம்: இரட்சிக்கும் ராஜா**

"மேசியா" அல்லது அபிஷேகம் பெற்றவர் என்பதற்கு ஈடான வேதவாக்கியங்கள் பழைய ஏற்பாட்டில் மிகக்குறைவு. ஆனால், வரப்போகிற இந்த தலைவனைக் குறித்து பல வேத வாக்கியங்கள் இருந்ததாகக் கருதினர். தானியேல் தீர்க்கதரிசனத்தில் ''பிரபுவாகிய மேசியா''வைக் குறித்துப் பேசினான். எண்ணெய் ஊற்றி அபிஷேகம் பண்ணுவது குறித்து தாவீது ராஜா பல சங்கீதங்களில் எழுதியுள்ளான். கர்த்தருடைய அபிஷேகத்திற்கு எண்ணெய் ஊற்றி அபிஷேகம் செய்வது ஒரு வெளிப்படையான அடையாளமாக இருந்து வந்தது. மேலும் ராஜாக்கள் சிங்காசனம் ஏறுவதற்காக மட்டுமின்றி ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும் தேவ ஊழியத்துக்கென்று நியமிக்கப் படுவதற்கும் அடையாளமாக அது இருந்துவந்தது. ஒருவர் ''கர்த்தருடைய அபிஷேகம் பெற்றவர்'' என்று கூறும் போதெல்லாம் மேற்கண்ட பொறுப்புகளை அது குறித்து வந்தது. (தானியேல் 9:25) (உதாரணம் சங்கீதம் 2:2)



ஒரு பரந்த ராஜ்யத்தை விவேகத்தோடும் நீதியோடும் அரசாட்சி செய்யப் போகிற ராஜாவைக் குறித்து அநேக வேதவாக்கியங்கள் உள்ளன. இயேசுவின் காலத்திலிருந்த யூதர்களுக்கு, மேசியா மேற்கொள்கின்ற ராஜாவாக வந்து ரோமரைத் தோற்கடித்து, இழந்து போயிருந்த இஸ்ரவேலின் மகிமைக்குத் தமது ஜனத்தைத் திரும்பவும் அழைப்பார் என்ற எதிர்பார்ப்பு இருந்து வந்தது. இது சாதாரண குடிமக்களுக்கு ஒரு நம்பிக்கையாக இருந்தது.

மேசியாவைக் குறித்து யூதர்களின் இந்தக் கண்ணோட்டம் மிகவும் சரியாக இருந்தது. மெய்யாகவே இயேசு இராஜாதி ராஜாவாக தேவனுடைய ராஜ்யத்தில் அரசாளப் போகிறவர். உலக முழுவதையும் எருசலேமிலிருந்து சமாதானத்தோடே ஆளப்போகிறார். இதில் சந்தேகமும் மனக்குழப்பமும் உண்டானது எப்போதென்றால், ராஜா முடிசூடும் முன்பு சிலுவையில் அடிக்கப்பட வேண்டும்



என்பதை யாருமே உணர்ந்திருக்கவில்லை.

**மேசியாவைப் பற்றி மறக்கப்பட்ட கண்ணோட்டம்:**

**பாடநுபவிக்கிற ஊழியர்**

மேசியாவின் ஊழியத்தின் மறக்கப்பட்ட பகுதியை ஏசாயா தீர்க்க தரிசி மிகத் தெளிவாக விளக்கிச் சொன்னான். அவர் அடிக்கப்படும் படி கொண்டுப் போகப்படுகிற ஆட்டுக்கு ஒப்பாக, ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்த தாசனாக தாழ்மையோடும் சாந்தமாகவும் பாடநுபவிக்கும்படி தம்மை ஒப்புக் கொடுத்தார்.

*"அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடநுபவித்தவருமாயிருந்தார். அவரை விட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம். அவர் அசட்டை பண்ணப் பட்டிருந்தார். அவரை எண்ணாமற் போனோம் மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நாமோ, அவர் தேவனால் அடிப்பட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப் பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்"* (ஏசாயா 53:3-5).



இந்த விதமான காட்சி, இயேசுவின் காலத்து யூதர்களில் சாதாரன குடிமக்களுக்கும் மதத்தலைவர்களுக்கும் முற்றிலும் வேற்றுமையான கருத்தாக இருந்தது. இயேசுவிடம் துடிதுடிப்புடன் பேசிவந்த பேதுரு இதை மட்டமாகக் கண்டித்தான். இயேசுவைப் பின்பற்றிவந்த அநேகர் இயேசுவின் பாடு மற்றும் தியாகம் குறித்த வார்த்தைகளைக் கேட்டதிலிருந்து அவரிடமிருந்து விலகிப் போனார்கள். ஏனெனில் அவர்கள் எதிர்பார்ப்பு எல்லாம் ரோம கொடூரர்களின் கையிலிருந்து விடுவிப்பார் என்ற எண்ணம் இருந்து வந்தது. (மத்தேயு 16:11-23)

**சில பொருத்தமான வேத பகுதிகள்**

| | | |
|---|---|---|
| பழைய ஏற்பாட்டில் மேசியா | : | சங்கீதம் 2:2; 45:7; 89:20; ஏசாயா 61:1-3; |
| அபிஷேகம் பண்ணப்பட்டவர் | : | தானியேல் 9:24-26. |
| பாடுபடுகிற மேசியா | : | சங்கீதம் 22:1-21; ஏசாயா 53; தானியேல் 9:26; சகரியா 12:10. |

| | | |
|---|---|---|
| வரப் போகிற ராஜா | : | 2 சாமுவேல் 7:12-16; சங்கீதம் 72; எரேமியா 23:5-6; 30:8-9; எசேக்கியேல் 37:24-25. |
| புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து | : | மத்தேயு 2:4; 22:41-45; மாற்கு 15:32; லூக்கா 2:11; யோவான் 1:41; 4:25-26; 7:26-31; அப்போஸ்தலர் 2:29-36; 9:20-22; 26:22-23. |
| தேவ ஆட்டுக் குட்டி | : | யோவான் 1:29,36; அப்போஸ்தலர் 8:32-35; 1 பேதுரு 1:18-21; வெளிப்படுத்தல் 5:5-12. |

## இரு கண்ணோட்டங்களையும் ஒருங்கிணைத்தல்:

### தேவனுடைய மேலான திட்டம்

மேசியா பழைய ஏற்பாடு வேதவாக்கியங்களிலிருந்து அநேக கருப்பொருட்களை ஒன்று சேர்க்க வேண்டியிருந்தது. தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றும்படி, மனுக்குலத்தின் பாவப்பலியாக மரிக்க பரிபூரண மனிதன் ஒருவர் தேவைப்பட்டார். அவர் மேல் விசுவாசம் வைப்பதன் மூலம் ஆண்டவரிடம் செல்லும் மார்க்கம் திறக்கப்பட்டது, பாவமன்னிப்பு மனுக்குலத்துக்குக் கிடைத்தது. அதன் பேரில் தங்களது பாவமன்னிப்புக்கென்று இயேசுவின் பேரில் விசுவாசம் வைத்தவர்கள் எவர்களோ அவர்கள் நீதிமான்களாக எண்ணப்பட்டு, நித்திய ஜீவனுக்குப் பாத்திரராக முடியும்.

*‘‘ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிரத்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்திரத்தை அடைந்து கொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருக்கிறார்’’* (எபிரெயர் 9:15).

பலிகளையும் ஆராதனையையும் குறித்த மோசேயின் கற்பனைகளில் ஏராளமானவை இயேசுகிறிஸ்துவின் கிரியையின் முன்னடையாள மாகவும் உவமைகளாகவும் இருந்தன. தமது இரட்சிப்பின் கிருபையை ஏற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு இயேசுகிறிஸ்து இப்போது பிரதான ஆசாரியராக ஊழியஞ்செய்கிறார். அவர் நமக்காகப் பிதாவினிடம் பரிந்து பேசுகிறதுடன் தமது சாயலாக நாம் மாறுவதற்காக நமது குணத்தை மாற்றும்படி உதவி செய்கிறார். அவர் பூமிக்குத் திரும்பவரும்போது உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்ப்பார். அவர் தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபித்து, பாவத்திலிநிந்தும் மரணத்திலிருந்தும் தாம் மீட்டுக் கொண்ட தமது ஜனத்துடன் சேர்ந்து எருசலேமிலிருந்து அரசாட்சி செய்வார். அது மேசியா/கிறிஸ்து/ராஜா/தீர்க்கதரிசி/தாசன்/ஆட்டுக்குட்டியான வரைக் குறித்த எல்லா தீர்க்கதரிசனங்களையும் முடிவுக்குக் கொண்டுவரும்.



*‘‘கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களையும் சுமந்து தீர்க்கும் படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசன மாவார்’’* (எபிரெயர் 9:28).

இயேசு மரித்து உயிர்த்தெழும் வரை இயேசுகிறிஸ்துவின் முழு தரிசனத்தையும் அவருடைய சீஷர்கள் புரிந்து கொள்ளவில்லை. கிலேயோப்பாவும் அவனுடனிருந்த சீஷனும் இயேசுவைக் கிறிஸ்துவாக முழு அளவில் தெரிந்துகொண்டவர்களில் முதல் நபர்களாக இருந்தனர். தொடர்ச்சியாக, யூதர்களிடமும் யூதரல்லாதவர்களிடமும் பிரசங்கித்த அப்போஸ்தலர்களின் கரிசனையானது, எல்லோரும் கடவுளின் நோக்கத்தை அவருடைய குமாரன் மூலமாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதாக இருந்தது.

*“பவுல் தன் வழக்கத்தின் படியே அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வு நாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து, அவர்களுடனே சம்பாஷித்து, கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டும் என்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து, திருஷ்டாந்தப் படுத்தினான்”* (அப்போஸ்தலர் 17:2-3).

நமது கையில் முழுவேதாகமும் இருக்கிறபடியால், பழைய உடன்படிக்கையாகிய பழைய ஏற்பாடு நூலிலுள்ள தீர்க்க தரிசனங்களையும், மேசியாவாகிய இயேசுகிறிஸ்து அவைகுறித்துப் பேசின விளக்கங்களையும், புதிய ஏற்பாட்டில் அவருடைய வாழ்க்கை வரலாறும் ஊழியமும், அதைக் குறித்து அப்போஸ்தலர் கூறிய விளக்கங்களையும் ஒன்று கூட்டி படிக்க முடிகிறது. நமக்கு இந்தப் பெரிய சிலாக்கியம் கொடுக்கப்பட்டதற்காக நாம் கடவுளுக்கு மிகவும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்க வேண்டும். எனவே இயேசு கிறிஸ்துவால் கிடைக்கும் மீட்பைப் பெற்றுக்கொள்ள சகல முயற்சிகளும் எடுத்து அதைப் புரிந்து கொள்ளத் தேவையான எல்லா நடவடிக்கையும் எடுப்போமாக.

## பொருளடக்கம்

‘மேசியா’ மற்றும் ‘கிறிஸ்து’ இரண்டுக்கும் அர்த்தம் ‘அபிஷேகம் பண்ணப்பட்டவர்’ அது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நீதியின் ராஜாவின் பட்டப்பெயர்களாகும். அந்த ராஜா இயேசு கிறிஸ்துவே.

கிறிஸ்து ராஜாவாக சிம்மாசனத்தில் அமரும் முன்னர், அவர் முதலாவதாக ஜனங்களின் பாவத்துக்காக மரித்து உயிர்த்தெழ வேண்டிதாயிருந்தது. அவர் மத்தியஸ்தராக இருந்து, தம்மில் விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் நித்திய ஜீவனையும் கிருபையையும் அளிக்கிறார். இயேசு மரித்து உயிர்த்தெழும் வரை அநேகர் மேசியா மரித்து உயிர்த்தெழ வேண்டும் என்பதைக் கண்டு கொள்ளாதிருந்தனர்.

இயேசுவை மேசியாவாக ஆண்டவர் நியமித்த அவருடைய திட்டமானது இயேசு பூமிக்கு வந்து ராஜாவாக அரசாட்சி செய்யும்போது முடிவுபெற்று நிறைவு பெறும்.

# இயேசு: தேவகுமாரன் மற்றும் மனுஷகுமாரன்

இயேசு முழுமையானவர். அவர் ஒருவரே ஆண்டவரைப் பிதாவாகவும் மனுக்குலத் தாயாரையும் கொண்டவர். அவர் ''தேவகுமாரன்'' என்றும் "மனுஷகுமாரன்" என்றும் இருபெயர்களில் அழைக்கப்பட்டார்.

**கவன ஈர்ப்பு : லூக்கா 1:26-38**

தேவன் தமது தூதன் காபிரியேல் மூலம் மரியாளிடம், அவள் பிள்ளை பெறுவாள் என்று சொல்லியனுப்பினார். அவள் பாலுறவு இல்லாமல் இயேசு என்ற ஆண் குழந்தையைக் கர்ப்பந்தரித்தாள். அப்படி கர்ப்பம் தரித்தது தேவனுடைய வல்லமையான பரிசுத்த ஆவியினால் ஆனபடியால், அந்தக் குழந்தை தேவனுடைய குமாரன் என்றும் மரியாளின் மகன் என்றும் அழைக்கப்பட்டு வந்தது.



1. மரியாள் கன்னியாக இருப்பது ஏன் முக்கியமாக இருந்தது ?

2. மரியாள் தான் கர்ப்பந்தரித்த செய்தியை தனது சிநேகிதிகளிடமும் உறவின் முறையில் பிறருக்கும் தன் வீட்டாருக்கும் எப்படி அறிவித்திருப்பாள் ? அவர்கள் அவளை நம்பினார்கள் என்று நினைக்கிறாயா ?

3. ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி குழந்தை பெறுவாள் என்ற தீர்க்கதரிசனத்தைப் பழைய ஏற்பாட்டில் கண்டுபிடியுங்கள். அது இயேசுவின் பிறப்பைக் குறித்துத்தான் பேசுகிறதா ?

4. இயேசு என்ற பெயரின் பொருள் என்ன ? (குறிப்பு : மத்தேயு 1:21 பாருங்கள்).

5. தாவீதின் சிங்காசனம் (வச.32) என்றால் என்ன ? எந்த பழைய ஏற்பாட்டு வாக்குத்தத்தத்தை காபிரியேல் நினைவூட்டினான் ?

6. இயேசு கர்ப்பந்தரிக்கும் முன்பே அவர் ஏதாவது வடிவில் அங்கே இருந்தார் என்று அநேகர் நினைக்கிறார்கள். இதற்கு உங்கள் உத்தரவு எதுவாக இருக்கும் ?

அதற்குப் பின்னால் மரியாள் தனக்குக் கணவனாக நியமிக்கப்பட்டிருந்த யோசேப்பைத் திருமணம்செய்து கொண்டாலும் அவர் இயேசுவுக்கு ஒன்றுவிட்ட தந்தையான இயேசுவை அடுத்து மரியாளுக்கு இன்னும் குழந்தைகள்



பிறந்தார்கள். அவர்கள் அனைவரும் இயேசுவுக்கு ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளானார்கள்.

**தேவ குமாரன்**

அனைத்து விசுவாசிகளுமே ஒரு விதத்தில் தேவனுக்குப் பிள்ளைகள் ஆவார்கள். நாம் எல்லாரும் தேவனுடைய குடும்பத்தில் தத்தெடுக்கப்பட்டுள்ளோம். ஆனால் இயேசு மாத்திரம் தேவனுடைய ஒரே பேறான குமாரனாக இருக்கிறார். இயேசு திருமுழுக்கு பெற்றபோது, "இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவிகொடுங்கள்" என்று தேவன் பேசினார்.

மற்றெந்த பிள்ளைகளையும் போலவே, இயேசு தமது தந்தையின் தன்மையைத் தரித்தார். அவர் தமது பிதாவைக் குறித்து விளக்கிப் பேசினார். அதனால் அவர் தைரியமாக : ''*என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்*" என்று கூறமுடிந்தது.

தேவனை நாம் நேரில் காணமுடியாவிட்டாலும், அவர் எப்படிப் பட்டவர் என்பதை அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை அறிகிறதன் மூலம் கண்டுக் கொள்ளலாம்.

**சில பொருத்தமான வேதபகுதிகள்**

**தேவ குமாரன்:** சங்கீதம் 2:7; மத்தேயு 3:17; 8:29; 14:33; 16:16; 17:5; 26:63-64; 27:54; மாற்கு 1:1:3:11; 9:7; 15:39; லூக்கா 1:35; 4:41; 22:70; யோவான் 1:34; 49:5 18-19; 10:31-36; 11:27; 14:9; 19:7; 20:31; அப்போஸ்தலர் 9:20; ரோமர் 1:4; எபிரேயர் 1:5; 3:6; 4:14; 5:5-8;1 யோவான் 4:15;5:5.

**தேவனோடு சமமாக இராதிருத்தல் :** யோவான் 5:30; 8:28; 12:49; 14:10,28.

**தேவனோடு ஒன்றாக இருத்தல் :** யோவான் 10:30; 17:20-22.

**மனுஷகுமாரன் :** மத்தேயு 16:13,27-28; மாற்கு 2:28; லூக்கா. 22:69; யோவான் 9:35-37; பிலிப்பியர் 2:7-8; எபிரெயர் 2:14; 4:15;5:2, 8-9; வெளிப்படுத்தல் 1:13-14.

**தேவனுடைய திட்டத்தில் எப்போதும் ஒரு பங்கு:** யோவான் 17:5; 1 பேதுரு 1:20; வெளிப்படுத்தல் 13:8.

இயேசுகிறிஸ்து தம்மைத் தேவனுடைய குமாரன் என்று சொன்னதை யூதர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள். அவர் தம்மைத் தேவனுக்குச் சரிசமமாகப் பேசினார் என்று தவறாக அர்த்தம் பண்ணினார்கள். இதனால், அவர்மேல் மூர்க்க வெறிகொண்டு அவரைக் கொலை செய்யவும் விரும்பினார்கள். யோவான் சுவிசேஷத்தில் இவ்வாறு வாசிக்கிறோம்.

*"அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ் சொல்லித் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கின படியினாலே, யூதர்கள் அவரைக் கொலை செய்யும்படி அதிகமாய் வகை தேடினார்கள்"* (யோவான் 5:18).

ஆனால் இயேசு அவர்களின் தவறான சிந்தையைத் தமது உத்தரவின்

மூலம் திருத்தினார்:

*"அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி, மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்ய மாட்டார். அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்"* (யோவான் 5:19).

இயேசு தம்மைப் பிதாவுக்குச் சமமாக நிறுத்தவில்லை. அவர், *"என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்"* என்றார். இப்படி பல முறை, நான் பிதாவுக்கு அடங்கி இருக்கிறேன் என்பதாகப் பேசினார்.

மேலும் இயேசு: *"நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்"* என்றார். அவர்கள் இருவரும் ஒருவராக இராமல், மனதிலும் நோக்கத்திலும் இணைந்திருந்தார்கள். ஆதலால் பின்பு இயேசு ஜெபம் பண்ணின போது, தேவனோடு நாம் ஒன்றாக இருக்கும் படி ஜெபித்தார் (யோவான் 10:30, 17:20-22).

**மனுஷ குமாரன்**

இயேசுவுக்கு மனித குலத்தின் தாயார் இருந்தார். இதை வலியுறுத்தும்படி அவர் அடிக்கடி தம்மைக் குறித்து "மனுஷகுமாரன்" என்று பேசிவந்தார்.

அவர் மனிதனுக்கு வரக்கூடிய சாதாரன கஷ்டங்கள் அத்தனையும் அநுபவித்தார். சில வேளைகளில் அவர் சோர்வடைந்து இளைப்பாறச் சென்றார். லாசரு மரித்த போது அவர் சோகமடைந்தார். அநீதியைக் கண்டு கோபமடைந்தார். மக்கள் இரக்கமின்மையைக் கண்டு வெதும்பினார். அவர் தமது மரணத்தைச் சந்திக்க நெருக்கிய போது, *"என் இருதியம் கலங்குகிறது"* என்றார். சிலுவை மரணத்தின் வழியாகக் கடந்து செல்வதிலிருந்து தம்மைக் காப்பாற்றும் படி ஆண்டவரிடம் வேண்டினார்.

மேலும் அவர் நரமனிதரைப் போல் எல்லாவித சோதனைகளிலும் கடந்து சென்றார்.

*"நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லா விதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவரா யிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்''* (எபிரெயர் 4:15).

எனவே நமக்குச் சோதனை வரும்போது, இயேசுவும் சோதனையைச் சந்தித்தார் என்ற காரணத்தினால் அவர் நம்மைப் புரிந்து கொள்ளுகிறார் என்ற நம்பிக்கையோடு இருக்கலாம். இதில் அற்புதமான பகுதி என்னவென்றால், நாம் சோதனையில் தவறிவிழுவது போல் அவர் சோதனைக்கு அசையவில்லை. அவர் பரிபூரணமான, பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்தார்.

இயேசு நீதியுள்ளவராயிருக்கும்படி மனதார முயற்சி எடுத்தார்.

"அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி," (எபிரெயர் 5:8-9) (1. பேதுரு 2:21-24ம் காண்க)



அவர் பாவமற்றவராயிருப்பதற்கு உந்தப்படாமல், தமது அன்பு மற்றும் உண்மையான கீழ்ப்படிதலினிமித்தம் பூரணமான வாழ்க்கை நடத்தினார். அவர் தேவ குமாரனாயிருந்தும்,

*"தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபம் எடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்"* (பிலிப்பியர் 2:7-8)

**தேவனுடைய திட்டம்:**

தேவனுடைய காரியத்தில் இயேசு ஒரு மிகமுக்கிய அங்கம் வகித்தார். ஆண்டவருடைய மனதில் இயேசுவுக்கு இடம் வைத்திருந்தார். ஆனால் இயேசு கர்ப்பத்தில் குழந்தையாக உருவாகிற வரைக்கும் (ஜடமாக) இருக்கவில்லை. பேதுரு எழுதினான்:

*"அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்ட வராயிருந்து, தமது மூலமாய் தேவன் மேல் விசுவாசமாய் இருக்கிற உங்களுக்காக இந்தக்* ***கடைசிகாலங்களில்*** *வெளிப்பட்டார்"* (1. பேதுரு 1:20).

இயேசு தேவனுடைய அநாதி தீர்மானத்தின் படி உலகத்திற்கென நியமிக்கப்பட்டிருந்தார். உதாரணமாக, வெளிப்படுத்தலில் இயேசுவைக்குறித்து, *"அவர் உலகம் உண்டானது முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி"* என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் என்னவெனில், உலகத்தை ஆண்டவர் உண்டாக்கும்போதே இயேசுவின் மரணத்தைக் குறித்துத் தேவன் திட்டம் வைத்திருந்தார். இதையே இயேசுவும் கூறினார்.

''பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்குண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்" (யோவான் 17:5).

வேறு விதமாகக் கூறினால், உலகத் தோற்றத்திற்கு முன்பே இருந்த தேவதிட்டத்தின்படி தேவனுடைய குமாரன் மகிமை பெறும் காலம் வந்துவிட்டது.

இயேசுவானவர் தேவனுடைய திட்டத்தின் மையப் பொருளாகப் பேசப் பட்டார். அவர் சரீரத்தில் பிறக்கும் முன்பே ஆதிமுதல் இருப்பவராக தேவனுடைய மனதிலும் திட்டத்திலும் காணப்பட்டார். அதையே பவுல் கூறினான்: *"தேவன் ஆதிகால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்குக் கிருபை அருளினார்."* நாம் நிஜமாகவே பிறந்திராமல் இருக்கும் போதே, தேவனுடைய மனதில் இருந்தோம்.

**பொருளடக்கம்:**

ஆதிமுதல் தேவனுடைய திட்டத்தில் இயேசு அடங்கியிருந்தார். அவர் பரிசுத்த ஆவியினாலே மரியாளிடத்தில் கர்ப்பந்தரித்துப் பிறக்கும்படி செய்தார். அவர்தேவனுடைய குமாரனாகவும் இருக்கிறார். அவர் தமது பிதாவினிடமிருந்து பல குணாதிசயங்களைப் பெற்றிருந்தார். அதினால் கடவுள் எப்படிப்பட்டவர் என்று நமக்குக் காட்டுகிறார். அவர் மனிதனுடைய பெலவீனங்களையும் சோதனைகளையும் அடைந்தார். ஆனாலும் அவர் ஒருபோதும் பாவஞ் செய்ய வில்லை.